மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 247/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராதாகிருஷ்ணன் (வா.சா.2) | சாதி : |
| த/பெ.க/பெ : முருகேசன் | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

22.02.2024

வாதி தரப்பு சாட்சி 2 மீண்டும் அழைத்ததின் பேரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. நான் இந்த வழக்கில் 2ம் வாதியாவேன். ராஜசேகர் 1ம் வாதிஆவார். 1ம் வாதி ராஜசேகர் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 23/22 ஆகும். விஸ்தீரணம் தெரியாது. தாவா சொத்து வாதிகளுக்கோ, பிரதிவாதிகளுக்கோ பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் சர்வே எண் 23/61 என்ற இடத்தை கிராம பொதுமக்கள் பயன்படுத்தி வருவதாக சொல்லுவது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும் தாவா இடமானது யாருடைய பயன்பாட்டில் இல்லாமல் காலிஇடமாக உள்ளது என்றால் சரியல்ல. காலிஇடத்தை பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது காலி இடமாக உள்ளது .

2. அரசினுடைய வருவாய் ஆவணங்களில் புறம்போக்கு காலி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாயநேந்தல் கிராமத்தின் பிரதிநிதிகள் சார்பாக நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொது மக்கள் துாண்டிவிட்டு வவீண் கலகம் செய்ய முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருவதற்கான ஆவணங்கள் இல்லை. தாவா சொத்தானது வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் வில்லங்க விவகாரங்கள் யாரும் ஏற்படுத்தவில்லை என்றாலும் நான் தேவையில்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 3, 4, 5

பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால் முன் அறிவிப்பு கொடுக்காமல் தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல

மறு விசாரணை –

3. இல்லை.